செ. கு. எண்: 063 நாள்: 28.06.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 28.6.2019

---

நியூஸ் ஜெ தொலைக்காட்சி நிறுவனத்தில் செய்தியாளராகப் பணியாற்றி வந்த காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சேலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரசன்னா மற்றும் அவரது மனைவி திருமதி அர்ச்சனா மற்றும் தாயார் திருமதி ரேவதி ஆகியோர் 26.6.2019 அன்று குளிர்சாதன பெட்டியில் மின் கசிவு காரணமாக ஏற்பட்ட தீ விபத்தில் காலமானார்கள் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

திரு. பிரசன்னா, அவரது மனைவி மற்றும் தாயார் ஆகியோரை இழந்து வாடும் அவர்களது குடும்பத்தினருக்கும், பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த செய்தியாளர் திரு. பிரசன்னா அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **மூன்று லட்சம்** ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேற்கண்ட சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**